மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் நாளை மறுநாள் எடுத்துக்கொள்ள இருக்கிறேன். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் சிலர் உட்கார்ந்துகொண்டே ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.)

3. 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம், மூன்றும் நாள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பேசுவார்கள்.

திரு. வி. எஸ். கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே .. .. ..

4. அவையுரிமைக் கேள்வி.

திரு. கே. விநாயகம் மீது.

திரு. க. இராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார், சபை நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்போது தனியாக வாதங்கள் இங்கே நடந்துகொண்டிருக்கிறது. இது முறையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எதற்கு வேண்டுமானாலும் எழுந்து, எழுப்புவது உறுப்பினர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. இனி, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லாததற்கும் "பாயிண்ட் ஆப் ஆர்டர்" என்று சொல்லி, எழுந்து, எழுப்பினால், இங்கே உட்கார்ந்திருக்கும் பேரவைத் தலைவரோ, துணைத் தலைவரோ, அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்பது பற்றி யோசிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

THIRU K. VINAYAKAM : (said sitting) That is our privil ge. You have no right to punish us. What are you talking ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைச் சபாநாயகருக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு வந்திருக்கும் காரணத்தால், இதுபற்றி இங்கே மேலும் விவாதம் ஏதுமின்றி, நானே அதை அவையுரிமைக் குழுவுக்கு அனுப்புவது என்று தீர்மானித்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : Is there any instance in any part of India in any legislature when a Speaker or Deputy Speaker has taken action because a point of order raised is not a point of order? If such a actio 1 is tak n we will react more. It will be injurious to democracy. லோக் சபாவைப் பாருங்கள். எல்லா சட்டசபைகளையும் பாருங்கள். Why do you take such a serious step ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், இந்தியாவிலே இருக்கும் எல்லா மாநிலங்களிலும் உள்ள உரிமைகள் இங்கே வரவேண்டும் என்கிறார்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து, நம்முடைய தமிழ்நாட்டுச் சட்ட மன்றம் கட்டிக்காத்துவரும் நல்ல பண்புகளை, வேறு மாநிலங்களையெல்லாம் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு, கெடுத்துவிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த எந்த மாநிலங்களிலோ என்ன என்னவோ நடைபெறுகின்றன. அவையெல்லாம் இங்கே நடைபெறவேண்டாம். துணைச் சபாநாயகர் தீர்ப்புக் கூறியபின், அவர்களுக்குப் பேச வாய்ப்பு இல்லை என்று, உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே ஒருவருக்கொருவர்

முணுமுணுப்பதும், ஓங்கிப் பேசுவதும், இன்னொருவர் காதில் விழும் அளவுக்கும் கொஞ்சம் நம்முடைய சட்டமன்றத்தினுடைய தரத்திற்குக் குறைவான வார்த்தையைப் பயன்படுத்துவதும் நல்லதல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூட, எழுந்து, ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பினார்கள். அந்த அளவுக்கு நம்முடைய சட்ட மன்றத்தினுடைய தரத்தையும், பண்பையும், பண்பாட்டையும் நாம் கெடுத்துவிடக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் துணைச் சபாநாயகர் அவர்களிடம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், எழுந்து அவர்களுடைய கருத்தைத் தெரியப்படுதலாமே தவிர, உட்கார்ந்து கொண்டே, "நீங்கள் என்ன கேட்பதற்கு?" என்ற முறையில் பேசலாமா ? பேசுவது நல்லதா ? அது நாம் கட்டிக் காத்துவரும் நல்ல பண்பாட்டுக்கு உரியதா ? இனியாவது, உறுப்பினர்கள் தங்களிடம் ஏதாவது கூற வேண்டியிருந்தால், எழுந்து நின்று, இந்தச் சபைக்கு இருக்கும் சட்டங்கள், விதிகள், முறைகள் இவைகளுக்கேற்ப, அவைகளை எடுத்துச் சொல்வது முறையாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்து, இந்த அளவோடு இந்தப் பிரச்சினையை விடுத்துவிட்டு, இன்றைய நிகழ்ச்சிகளை மேற்கொண்டு தொடரலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Thiru K. VINAYAKAM: **On a point of personal explanation now that the Minister has mentioned my name.** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதற்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் உரிமை உண்டு. ஒருவேளை, துணைச் சபாநாயகர் அவர்களுடைய கருத்துப் படி அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லாமல் இருக்கலாம். அப்படியானால், அதை பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, தவறு, உட்காருங்கள் என்று சொல்லுவதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லாததை வேண்டுமென்றே எழுப்பினால், இப்படியெல்லாம் எனக்குத் தொல்லை தந்தால், அதற்கு நான் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யோசிக்கப் போகிறேன் என்று சொல்வது இப்போதைய விதிகளின்படி சபாநாயகருக்கோ துணை சபாநாயகருக்கோ அந்த உரிமை இல்லை. பின்னால் யோசித்து, ரூல்சை அமெண்டு பண்ணி, ஏதாவது செய்யலாமே தவிர, இப்போதுள்ள விதிகளின்படி அந்த உரிமை இல்லை. **'You have no right to punish a member for raising an improper point of order. You can rule it out of order. You cannot punish a member.** உடனே, அவையுரிமைக் குழுவுக்கு அனுப்புகிறேன் என்றால், வேறு வழி இல்லை எங்களுக்கு. நாங்கள் அப்பொழுது பார்த்துக்கொள்ளுகிறோம், அவையுரிமைக் குழு என்ன செய்கிறது என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டசபை உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பதில் என்னைவிட மற்றவர்களுக்கு அவ்வளவு அக்கறை இருக்காது என்பதை நான் உணர்த்திக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்களே, ஒரு வக்கீல். நான் என்ன சொன்னேன் என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு, உறுப்பினர் எதற்கு வேண்டுமானாலும் எழுந்து விடுகிற வழக்கம் இங்கே நடைமுறையில் இருக்கிறது. அது கூடாது என்பதற்காகக் கூறினேனே தவிர, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எந்த உறுப்பினரும் எழுப்பக் கூடாது என்று நான் கூறவில்லை. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயரில் எதற்கு வேண்டுமானாலும் எழுந்து நிற்கும் முறை இருக்கிறதே, அது சரியல்ல. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்து, அதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்ற நிலைமை வருமானால், அப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதை நான் யோசிக்கப் போகிறேன் என்று சொன்னேனே தவிர, வேறு அல்ல. "யோசிக்கப் போகிறேன்" என்று சொன்ன நேரத்தில் யோசிக்க வேண்டி நேரிடும் என்ற கருத்தில் சொன்னேனே தவிர, இப்படியே முடிவு எடுத்துவிட்டோம் என்ற கருத்தில் சொல்லவில்லை. யோசிக்கப் போகிறேன் என்னும்போது, விதிகளின்படி எப்படி ஆராய வேண்டும் என்பது எனக்கும் தெரியும். சபாநாயகரோ, துணைச் சபாநாயகரோ, தனியாக உருவாக்கி விடுவதில்லை. விதிமுறைகள் பற்றி

ஆராய்வதற் கென்று தனி அமைப்பு முறை இருக்கிறது. அந்த அமைப்பு முறைதான் செய்யும். அப்படிக் கூறியிருக்கிறேன். நானே ஆக்கிவிடு கிறேன் என்று சொல்லவில்லை. ஆக்கி விடுவதற்குச் சபாநாயகருக்கோ, துணைச் சபாநாயகருக்கோ என்ன உரிமை இருக்கிறது என்பதை மற்றவர் கள் கேட்பதுதான் முறையாகத் தெரியவில்லை. இந்தச் சட்ட மன்றம் நல்ல முறையில் ஒழுங்காக நடைபெற வேண்டும். அதே நேரத்தில், உறுப்பினர்களுடைய உரிமைகள் காக்கப்பட வேண்டும், அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். இங்கே ஒருவர் பாயிண்ட் ஆஃப் ஆர்டர், அங்கே ஒருவர் பாயிண்ட் ஆஃப் ஆர்டர், எதற்கு வேண்டுமானாலும் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி, உறுப்பினர்கள் எழுந்திருந்து பேசுவதும், "அது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல" என்று சொன்னவுடன், "பர்ஸனல் எக்ஸ்ப்லனேஷன்" என்றோ, "கிளாரிபிகேஷன்" என்றோ சொல்லிப் பேசுவதும், ஆகிய இப்படிப்பட்ட முறைகளினால் சபையினுடைய நடவடிக்கைகளுக்கு இடையூறு உண்டாகும் என்ற காரணத்தினாலே சொன்னேன். இந்தச் சபையை நல்ல முறையில் நடத்திச் செல்ல வேண்டுமென்ற முறையிலே நடத்திச் செல்லும் போது, அதற்கு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இல்லை யென்றால், அந்தப் பொறுப்பு, சபாநாயகரையோ, துணைச் சபாநாயகரையோ மட்டும் தான் சாரும் என்று தயவு செய்து இங்கே இருக்கும் உறுப்பினர்கள் கருதிக் கொள்ள வேண்டாம். என்று, அந்த முறையில் கூறியிருக்கிறேன். ஆகவே, தான், அப்படிப்பட்ட முறையை உண்டாக்கக்கூடாது, பின்னால் அப்படிபட்ட முறை வந்தால் என்ன செய்வது என்று யோசிக்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறேனே தவிர, வேறு இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அநேகமாக இந்தப் பிரச்சினை இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டதாகக் கருதுகிறேன். உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கூறி ஒரு கூற்றை மறுப்பதற்கோ, அல்லது தான் கருதியதைச் சொல்வதற்கோ எழுந்து நிற்கின்ற நிலைமை இந்த மன்றத்திலே அதிகமாகிக் கொண்டு வருகிறது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை யென்று தலைவர் அவர்கள் சொல்லும்போது, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் என்று கூறி, தான் கருதியவற்றைக் கூற முனைகிறார்கள். அப்படி பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் என்ற தலைப்பிலே எழுந்து சொல்ல வேண்டியதைச் சொல்ல விரும்பும்போது, பேசிக் கொண்டிருக்கின்ற உறுப் பினர் சம்மதம் தந்து இடம் அளிப்பாரானால் விளக்கம் கேட்கும் உறுப் பினர் பேசுவதுதான் முறையாக இருக்கிறது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கூறி, அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை யென்று தலைவர் அவர் களால் மறுக்கப்படும்போது, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் என்று வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற நேரத்தில் முதலில் உறுப் பினர் எழுப்ப விரும்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டர் பிரச்சினைக்கே வலிவு இல்லாமல் போய்விடுகிறது. பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் என்று உறுப்பினர்கள் எழுந்திருக் கின்ற நேரத்தில், அச்சமயத்தில் பேசிக் கொண்டிருக்கின்ற உறுப்பினர் சம்மதித்து இடமளித்தால் பேசலாம். அப்படியின்றி எதையாவது சொல் லிக் கொண்டு அடிக்கடி குறுக்கிடுவது நல்லது அல்ல. இந்தப் பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து, ஒழுங்கு பிரச் சினையை எல்லா நேரத்திலும் எழுப்பாமல், தக்க சமயத்தில், பயன்படுத்தி னால், இந்தப் பேரவையின் நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உதவி சபாநாயகர் அவர்களே, சபையை சுமுகமாக நடத்திச் செல்வதில் அமைச்சர் அவர்கள் சொன்னபடி யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அதே சமயத்தில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, மற்ற உறுப்பினர்—எந்தக் கட்சி யைச் சேர்ந்தவராக இருந்தாலும்—குறுக்கிட்டுப் பேசுவது, கேள்வி கேட் பது போன்ற நிலைமைதான் இருந்து வருகிறது என்று நான் போன

1968 மார்ச் 2] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தடவையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். சபையில் யார் பேசுவதாக இருந்தாலும், பேசினாலும் அந்தப் பேச்சுக்கு விளக்கம் கேட்பதோ, ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதோ முறைதான். ஆனால், உதவி சபா நாயகர் அவர்கள் இந்தப் பிரச்சினையை உரிமைக் கமிட்டிக்கு அனுப்புவதாக நான் அறிவிக்கிறேன் என்று கூறினார். அப்படி அனுப்பியிருந்தால் . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அனுப்புவதாக யோசிக்கிறேன் என்றுதான் சொன்னார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நாம் ஒரு கமிட்டி போட்டு, எல்லோரும் சேர்ந்து ஒரு சுமுகமான முடிவு எடுத்துக்கொள்வதுதான் நல்லது. சபையில் பாயின்ட் ஆஃப் ஆர்டரே ரெயிஸ் பண்ண முடியாத நிலைமை ஏற்படக் கூடாது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் பூராவுமே வேண்டியதில்லையென்று சொல்ல முடியாது. நான்கூட லோக் சபையில் இருந்திருக்கிறேன். கேள்வி நேரத்திற்குப் பின்னால், 1½ மணி நேரம் இந்த பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கே ஆகிக் கொண்டிருக்கிறது. நாம் பாராளுமன்றத்திலே இருந்து வந்தவர்கள். ஆகவே நமும் அந்தப் பாராளுமன்ற முறையை ஏற்றுக் கடைப்பிடிக்கலாம். (சிரிப்பு) எதிர்க் கட்சியினர் பேசும்போது ஆளும் கட்சியில் இருப்பவர்கள், குறிப்பாக அமைச்சர்கள் அதிகமாகக் குறுக்கிடுகிறார்கள். அப்படியில்லாமல் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அமைச்சர்கள் குறுக்கிடுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏன் பயப்படுகிறார்கள் ? நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது ஆளும் கட்சியில் இருப்பவர்கள், அமைச்சர்கள் எவ்வளவோ குறுக்கிட்டார்கள். அப்பொழுதெல்லாம் நாங்கள் மிக அமைதியாக இருந்தோம். அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகின்ற நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அடிக்கடி குறுக்கிட்டு எழுந்து பேசுவார். அறிஞர் அண்ணாவும், திரு சுப்பிரமணியமும் மாறி மாறி எழுந்து பேசிக் கொண்டிருப்பார்கள். சபாநாயகர் கூட அலுத்துப்போய் யாராவது ஒருவர் பேசுங்கள் என்று கூறியிருக்கிறார். அத்தனையும் சபை நடவடிக்கைக் குறிப்புக்களைப் பார்த்தால் நன்கு தெரியவரும். குறுக்கிடுவதைப் பொறுத்தவரையில் நாம் ஒரு நல்ல வரையறைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அமைச்சர்கள் பேசும்போது விளக்கம் கேட்பதற்காக எதிர்க் கட்சித் தலைவர்கள் குறுக்கிடலாம். அதே போல எதிர்க் கட்சித் தலைவர்கள் பேசும்போது அமைச்சர்கள் விளக்கம் கேட்பதற்காகக் குறுக்கிடலாம். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது எதிர் கட்சித் தலைவர்கள் விளக்கம் கோரி குறுக்கிடலாம். அதே போல எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் விளக்கம் கேட்பதற்காக அமைச்சர்கள் குறுக்கிடலாம். உறுப்பினர்கள் இரு தரப்பிலும் குறுக்கிடுவதை நிறுத்திக்கொள்ளலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்தச் சபையினுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அமைச்சர்கள் குறுக்கிடும்போது எதிர்க்கட்சித் தலைவர் ஏன் பயப்படுகிறார் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அமைச்சர்களின் குறுக்கீட்டின்போது நானும் பயப்படவில்லை. என்னுடைய கட்சியும் பயப்படவில்லை. குறுக்கீடு இருக்கும்போதுதான் பேச்சில் கொஞ்சம் வேகம் வரும். உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் உறுப்பினர்களின் பேச்சை திசை திருப்பிவிடுவதற்காக இதைக் கையாளக் கூடாது. சரியான விளக்கம் பெற குறுக்கிடுவது நல்லதுதான். இது நாம் சாப்பிடும்போது ஊறுகாய் தொட்டுக்கொள்வது போல இருக்கும். குறுக்கிடுவதில் இரண்டு வகை உண்டு. நல்ல விஷயங்களைக் கேட்டு விளக்கம் பெறக் குறுக்கிடுவது ஒன்று. உறுப்பினரின் பேச்சின் வேகத்தைக் குறைத்து, திசை திருப்பிவிடுவதற்காக குறுக்கீடு செய்வது மற்றொன்று. என்னைக் கேட்டால் கூடுமான வரையில் குறுக்கிடாமல் இருப்பதுதான் நல்லது. நீங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் குறுக்கிடுங்கள், நான் பயப்படவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கட்சி அங்கத்தினர்கள் பயப்படுகிறார்கள் என்று சொன்னதற்கு அவர்களுக்கு என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தபடியாக, திரு வி. எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பேசுவார்கள்.

3. 1968-69-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தால் திருவள்ளுவராகவும், உருவத்தால் உலகப் புகழ் திருக்குறளாகவும் திகழ்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களால் இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1968–69–ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை இப்பொழுது நாட்டிலேயுள்ள சூழ்நிலைக்கேற்ப, நமது பொருளாதார நிலைக்கேற்ப, முறையோடு தீட்டப்பட்ட திட்டமாகும். அதிலே நல்ல உள்ளம் படைத்தவர்கள் பாராட்டக் கூடிய முறையில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. பல அம்சங்கள் இருப்பினும் குறிப்பாகப் பாராட்டக் கூடியது ஒன்று உண்டு. சென்னையை யொட்டியுள்ள புற நகரங்களிலும், மதுரை நகரத்திலும் உள்ள ஆசிரியர்களுக்கும், நகர மன்ற, ஊராட்சிமன்றப் பணியாளர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்குவது என்ற திட்டம்தான். மேலும், பலதொழில் பள்ளி மாணவர்களுக்குச் சம்பளச் சலுகை அளித்திருப்பதும், அரிசனங்கள் தொழில் வாய்ப்பு பெறக் கடன் வழங்கும் திட்டமும், அரிசன மாணவர்களுக்குச் சீருடை வழங்கு திட்டமும், இலங்கை அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டமும், சென்னை மாநகராட்சிக்கும் மற்ற நகராட்சிகளுக்கும் சிறப்பு உதவித் திட்டமும், நெல் விளைச்சலை 13 லட்சம் ஏக்கராவிலிருந்து 25 லட்சம் ஏக்கராவாக உயர்த்தும் திட்டமும் குறிப்பாகவும், சிறப்பாகவும் வரவேற்கத் தக்க அம்சங்களாகும். இவ்வளவு நல்ல பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையை மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள், பாராட்ட மனம் வராத காரணத்தாலோ, என்னவோ, அவைகளை யெல்லாம் விட்டுவிட்டு, இந்த வரவு செலவுத் திட்டம் பக்கத்திற்குப் பக்கம் மத்திய அரசைப் பழி போடுவதாக இருக்கிறது என்று குறை கூறிப் பேசி இருக்கிறார்கள். இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு மாயா ஜால திட்டம் என்று காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கூறினார். உள்ளபடியே பக்கத்திற்குப் பக்கம் மாநில அரசு மத்திய அரசின் மீது பழியையா போடுகிறது என்பதை அந்த உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த விதத்தில் மத்திய அரசின் மீது பழி போடப்பட்டிருக்கிறது என்பதை அந்தக் காங்கிரஸ் உறுப்பினர் தக்க ஆதாரத்துடன் விளக்கவில்லை. மத்திய அரசைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது உண்மை. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் நிதி வசதிகளைப் பகிர்ந்து அளிப்பதில் உள்ள உறவு தெள்ளத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. இது எந்த வகையில் மத்திய அரசின் மீது பழி போடுவதாக ஆகும் என்பதை யாரும் விளக்கவில்லை. நிதி

முற் பகல் 10-30 நிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சில வாசகங்களைக் குறிப்பிடுகிறேன்:

"வளரும் வருவாய் வாய்ப்புக்கள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு மாறாக, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற, செலவினம் விரிந்து, செல்லும் இயல்புடைய பரந்த பொறுப்புக்கள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன." என்று கூறப்பட்டுள்ளது. இது உண்மை இல்லையா என்று கேட்கிறேன். இதைச் சொல்லுவது எந்த வழியில் மத்திய அரசின் மீது பழியைப் போடுவதாக ஆகும்? நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக ஆகும் என்பது புரியவில்லை. நம்முடைய வருவாய்த் துறை குறைவாகவும், செலவினங்கள் விரிந்துபோவதும் இந்த மாநிலத்திற்குப் பாதக